ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

2.8 – இந்திரனோடு

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

2.8 – இந்திரனோடு

‡ இந்திரனோடு பிரமன் ⋆
ஈசன் இமையவர் எல்லாம் ⋆
மந்திர மா மலர் கொண்டு ⋆
மறைந்துவராய் வந்து நின்றார் ⋆
சந்திரன் மாளிகை சேரும் ⋆
சதுரர்கள் வெள்ளறை நின்றாய் ! ⋆
அந்தியம் போதிதுவாகும் ⋆
அழகனே ! காப்பிட வாராய் ॥ **2.8.1** ॥

கன்றுகள் இல்லம் புகுந்து ⋆
கதறுகின்ற பசுவெல்லாம் ⋆
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி ⋆
நேசமேல் ஒன்றும் இலாதாய் ! ⋆
மன்றில் நில்லேல் அந்திப் போது ⋆
மதிள் திருவெள்ளறை நின்றாய் ! ⋆
நன்று கண்டாய் என்தன் சொல்லு ⋆
நான் உன்னைக் காப்பிட வாராய் ॥ **2.8.2** ॥

செப்போது மென் முலையார்கள் ⋆
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு ⋆
அப்போது நான் உரப்பப் போய் ⋆
அடிசிலும் உண்டிலை ஆள்வாய் ! ⋆
முப்போதும் வானவர் ஏத்தும் ⋆

முனிவர்கள் வெள்ளறை நின்றாய் ! ⋆
இப்போது நான் ஒன்றும் செய்யேன் ⋆
எம்பிரான் ! காப்பிட வாராய் ॥ **2.8.3** ॥

கண்ணில் மணல் கொடு தூவிக் ⋆
காலினால் பாய்ந்தனை என்றென்று ⋆
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு ⋆
இவரால் முறைப்படுகின்றார் ⋆
கண்ணனே ! வெள்ளறை நின்றாய் ! ⋆
கண்டாரோடே தீமை செய்வாய் ! ⋆
வண்ணமே வேலை அதொப்பாய் ! ⋆
வள்ளலே ! காப்பிட வாராய் ॥ **2.8.4** ॥

பல் ஆயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் ⋆
தீமைகள் செய்வார் ⋆
எல்லாம் உன் மேல் அன்றிப் போகாது ⋆
எம்பிரான் ! நீ இங்கே வாராய் ⋆
நல்லார்கள் வெள்ளறை நின்றாய் ! ⋆
ஞானச் சுடரே ! உன் மேனி ⋆
சொல் ஆர வாழ்த்தி நின்றேத்திச் ⋆
சொப்படக் காப்பிட வாராய் ॥ **2.8.5** ॥

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் ⋆
கரு நிறச் செம் மயிர்ப் பேயை ⋆
வஞ்சிப்பதற்கு விடுத்தான் ⋆
என்பதோர் வார்த்தையும் உண்டு ⋆
மஞ்சு தவழ் மணி மாட ⋆
மதிள் திரு வெள்ளறை நின்றாய் ! ⋆

அஞ்சுவன் நீ அங்கு நிற்க ⋆
அழகனே ! காப்பிட வாராய் ॥ **2.8.6** ॥

கள்ளச் சகடும் மருதும் ⋆
கலக்கழிய உதை செய்த ⋆
பிள்ளை அரசே ! நீ பேயைப் பிடித்து ⋆
முலை உண்ட பின்னை ⋆
உள்ள ஆறொன்றும் அறியேன் ⋆
ஒளி உடை வெள்ளறை நின்றாய் ! ⋆
பள்ளி கொள் போதிதுவாகும் ⋆
பரமனே ! காப்பிட வாராய் ॥ **2.8.7** ॥

இன்பம் அதனை உயர்த்தாய் ! ⋆
இமை அவர்க்கென்றும் அரியாய் ! ⋆
கும்பக் களிறட்ட கோவே ! ⋆
கொடுங்கஞ்சன் நெஞ்சினில் கூற்றே ! ⋆
செம் பொன் மதிள் வெள்ளறையாய் ! ⋆
செல்வத்தினால் வளர் பிள்ளாய் ! ⋆
கம்பக் கபாலி காண் அங்குக் ⋆
கடிதோடிக் காப்பிட வாராய் ॥ **2.8.8** ॥

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு ⋆
எழில் மறையோர் வந்து நின்றார் ⋆
தருக்கேல் நம்பி ! சந்தி நின்று ⋆
தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள் ⋆
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத் ⋆
தேசுடை வெள்ளறை நின்றாய் ! ⋆

உருக் காட்டும் அந்தி விளக்கு ⋆
இன்றொளி கொள்ள ஏற்றுகேன் வாராய் ॥ **2.8.9** ॥

‡ போதமர் செல்வக் கொழுந்து ⋆
புணர் திரு வெள்ளறையானை ⋆
மாதர்க்குயர்ந்த அசோதை ⋆
மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம் ⋆
வேதப் பயன் கொள்ள வல்ல ⋆
விட்டுசித்தன் சொன்ன மாலை ⋆
பாதப் பயன் கொள்ள வல்ல ⋆
பத்தர் உள்ளார் வினை போமே ॥ **2.8.10** ॥

அடிவரவு — இந்திரனோடு கன்றுகள் செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பமதனை இருக்கொடு போதமர் வெண்ணெய்விழுங்கி

இந்திரனோடு முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்